**கடான பிரதேச சபை - 2023**
**-------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

கடான பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கடான பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, இந்த அறிக்கையில் 1.6.4 பந்தியின் அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் இலக்கம் 3.28 இன் மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.2 இற்கு இணங்க செயற்பாட்டுத் | ஏற்றுக்கொள்கின்றேன் என. | நியமத்திற்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொழிற்பாடுகளின் மூலமான காசுப்பாய்ச்சலை கணிக்கும் போது ஆண்டிற்கான மிகை ரூபா 112,889,567 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்ததுடன் காசாக மேற்கொள்ளப்படாத கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் மீண்டும் சீராக்கல் செய்திருக்கவில்லை. மேலும் அகல்விரிவான வருமானக் கூற்றில் இனங்கண்டிருந்த ரூபா 12,711,909 இற்கான மூலதனச் செலவு மானியம் ரூபா 3,249,894 தொகையென சீராக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் பெற வேண்டியவைகளின் அதிகரித்தல் ரூபா 27,743,931 தொகையாகக் காணப்பட வேண்டிய போதிலும் ரூபா 38,564 இற்கான குறைவடைதலொன்று காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நியமத்தின் இலக்கம் 3.29 இன் மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.3 இற்கு இணங்க முதலீட்டு தொழிற்பாடுகளின் மூலம் கிடைத்த காசுப்பாய்ச்சலை கணிக்கும் போது நிலையான வைப்புக்களில் பணம் முதலீடு ரூபா 321,000,000 தொகை மற்றும் நிலையான வைப்புக்கள் விடுவித்துக் கொள்ளல் ரூபா 310,550,000 தொகை என காட்டப்படுவதற்கு பதிலாக, முதலீடு என ரூபா 264,396,159 தொகை காசு உட்பாய்ச்சல் என காட்டப்பட்டிருந்தது. மேலும் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 61,550,705 காட்டுவதற்கு பதிலாக ரூபா 62,027,333 தொகை காசு உட்பாய்ச்சல் என காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | நியமத்தின் இலக்கம் 3.30 இன் மற்றும் அதன் பின் இணைப்பு 2 இல் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல்களில் EG 6.4 இற்கு இணங்க நிதித் தொழிற்பாடுகளின் மூலமான காசுப் பாய்ச்சலை கணிக்கும் போது கிடைத்திருந்த மூலதன மானியம் ரூபா 9,449,572 தொகை மற்றும் நிதிக் கிரயம் ரூபா 1,901,588 தொகையும் காட்டப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன் என. | நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 21,750,000 பெறுமதியான மஹஹுஂனுபிடிய தமிந்தகஹவத்த காணியின் பெறுமதி இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன் என. | கணக்குகள் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2022 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த மீள்மதிப்பீட்டின் படி 18 பாதைகளுக்காக ரூபா 28,750,000 இற்கான பெறுமதி காணிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதற்குரிய ரூபா 2,875,000 இற்கான பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 2022 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த மீள் மதிப்பீட்டின் படி 05 நீர் செயற்திட்டங்களுக்காக ரூபா 27,417,500 இற்கான பெறுமதி காணிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வு அதற்குரிய ரூபா 685,438 இற்கான கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | முதுவாடிய கடையறை மற்றும் வேத்தாவ தகனகூட கட்டிடத்தின் பெறுமதி முறையே ரூபா 141,208 மற்றும் ரூபா 490,000 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | காணிகள் விற்பனையின் மூலமான வரி ரூபா 996,142 தொகையில் ரூபா 633,842 தொகை வருமானமாக காட்டப்படாமல் பொது வைப்புக கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன் என. | கணக்குகள் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 12 ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண விடயங்களுக்காக மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு ரூபா 23,440,709 தொகை பெறுமானத்தேய்வு ஒதுக்கக் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண சொத்துக்கள் செலவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (எ) | 2 செயற்திட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பாக ரூபா 552,084 தொகை திருத்த வேலை செலவென கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த புரநெகும கேட்போர் கூடத்தின் நிர்மாண வேலை 2024 மே 06 திகதி அளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும் 2023 திசெம்பர் 31 திகதி வரை செலவிடப்பட்டிருந்த ரூபா 97,596,694 தொகை நடைமுறை வேலையென காட்டப்படுவதற்கு பதிலாக கட்டிடங்கள் என மூலதனப்படுத்தப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான ரூபா 2,035,000 தொகை பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | சபையினால் மீளாய்வாண்டின் போது பணமாக கிடைக்கப்பெற்ற மூலதன மானியம் ரூபா 12,711,909 தொகை மீளாய்வாண்டின் அகல்விரிவான வருமானக் கூற்றில் மீண்டுவரும் அல்லாத செலவுகளுக்காக அரசாங்கத்தினால் மாற்றப்பட்டவை என ஆண்டிற்கான வருவாய்க்கு இணங்காணப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஒ) | மீளாய்வாண்டின் போது ரூபா 820,988 இற்கான தேறிய பெறுமதியாகிய ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் அப்புறப்படுத்தும் நட்டம் ஆகிய ரூபா 815,388 தொகை மீளாய்வாண்டின் அகல்விரிவான வருமானக் கூற்றில் சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் விற்பனையின் மூலம் கிடைத்திருந்த ரூபா 5,600 இற்கான வருமானம் மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஓ) | மீளாய்வாண்டு இறுதித் திகதில் உள்ளவாறு பலவின கடன்கொடுத்தோர் மீதியில் உரிய செலவுகளை கழித்த | ஏற்றுக்கொள்கின்றேன் என. | கணக்குகள் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| பின்னர் மீதியாகியிருந்த ரூபா 3,469,251 தொகைக்கான மீதியொன்றின் மிகை ஒதுக்கம் தீர்த்திருக்காமையால் கடன்கொடுத்தோர் மீதி மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| (ஔ) 2023 ஆண்டின் காணிகளை துண்டுகளாக்கி விற்பனை செய்யும் போது சபைக்கு கிடைத்திருந்த 3 ரூட் 2.66 பர்சஸ், 22.43 பர்சஸ் மற்றும் 3 ரூட் 12.8 பர்சஸ் பொது வசதிக்கான காணிகளின் ஒரு பர்சஸிற்கான குறைந்த விற்பனை விலையை கவனத்தில் எடுக்காமல் கிடைத்திருந்த காணி உறுதியின் பெறுமதி ரூபா 100,000 தொகை வீதம் காணிகளின் பெறுமதி என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி ஒரு பர்சஸிற்கான குறைந்த விற்பனை விலையை கவனத்தில் எடுக்கும் போது அந்த காணிகளின் பெறுமதிகளை முறையே ரூபா 37,411,300 தொகை, ரூபா 6,729,000 தொகை மற்றும் ரூபா 19,521,600 தொகையாக காணப்பட வேண்டியிருந்த போதிலும் முறையே அந்தக் காணிகளின் பெறுமதி ரூபா 37,311,300 தொகையினால், ரூபா 6,629,000 தொகையினால் மற்றும் ரூபா 19,421,600 தொகையினால் குறை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமையால் காணியின் பெறுமதி ரூபா 63,361,900 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகளின் கூட்டுத்தொகை மற்றும் நிதிக் கூற்றுக்களின் 05 கணக்கு மீதிகளிடையே ரூபா 34,253,956 தொகைக்கான இணக்கமின்மை காணப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | வித்தியாசத்திற்கான காரணங்களை கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | முற்கொடுப்பனவு | 81,392 | முற்பணம் வழங்கியிருந்த தரப்பினர் மற்றும் காலம் | ஏற்றுக்கொள்கின்றேன் என. | குறிப்பிட்ட சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீதிகள் இணங்காமை - இருப்பு | 207,906 | அட்டவணைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | கள்வர்கள் உடைத்ததனால் ஏற்பட்ட நட்டம் | 13,698 | அட்டவணைகள் | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | மூலதன மானிய செலவு | 3,249,894 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | கணக்கு புத்தகங்கள் | 18,340,030 | நாட்குறிப்பு பதிவுகள் | -மேற்படி- | -மேற்படி- |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் அத்தியாயம் VII பிரிவு 38(2) | நிதிக் கட்டுப்பாட்டுக்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுகின்றது எனவும், அந்த முறைமையை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமை வெற்றிகரமாக நடாத்திச் செல்லப்படுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிறைவேற்றப்பட வேண்டிய | ஏற்றுக் கொள்கின்றேன் என. | குறிப்பிட்ட விதிக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எழுத்துமூல மீளாய்வொன்றின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | பிரதேச சபை நிதி நிருவாகத்திற்குரிய கணக்கு அலுவல்கள் தொடர்பான விதி 398 | அசையாத சொத்துக்களை வாடகைக்கு கொடுக்கும் போது குறைந்த விலைகூறல் பெறுமதியை தீர்மானிப்பதற்காக அரச அல்லது தனியார் பட்டய பெறுமதி மதிப்பீட்டாளர் ஒருவர் மூலம் சான்றுபடுத்தப்பட்ட பெறுமதியை அடிப்படையாகக் கொள்ள வேண்டியிருந்த போதிலும் இறுதியாக பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொண்ட காலம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் குறைந்த விலைகூறல் பெறுமதி என 05 இறைச்சிக் கடைகள் மற்றும் மீன் கடைகளுக்காக 2021 ஆண்டின் டெண்டர் தொகையும் வாராந்த சந்தைக்காக 2021 ஆண்டின் டெண்டர் தொகைக்கு 10 சதவீதம் அதிகரிப்பொன்றுடனும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன் என. | குறிப்பிட்ட விதிக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நி.பி. 571 | இரண்டு வருடங்களை மிகைத்துள்ள ரூபா 7,316,231 இற்கான காலவதியாகிய வைப்புக்களை ஆதனவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 24 திகதிய LGD/09/2019(1) இலக்கங் கொண்ட உள்ளூராட்சி சுற்றறிக்கை | எல்ஜீ.21/2 படிவத்தில் காட்டப்பட்டுள்ளவாறு மாகாண அரச உத்தியோகத்தர்களின் முற்பண “பீ” கணக்கின் எல்லைகளை அங்கீகரித்துக் கொள்ள வேண்டியிருந்த போதிலும் சபையினால் முற்பணக் கணக்கு எல்லைகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2021 செப்தெம்பர் 29 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 2.4 | 2023 ஆண்டின் போது 03 ஒப்பந்த வேலைகளை விட கூடுதலாக ஒப்பந்த வேலைகளில் ஈடுபட்டிருந்த சமூக அடிப்படை அமைப்புக்கள் இரண்டிற்கு 06 ஒப்பந்த வேலைகளின் வரையறையை மிகைத்து ரூபா 9,321,647 தொகைக்கான 05 ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன் என. | குறிப்பிட்ட விதிக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 122,351,582 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 102,456,438 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| வீதவரி மற்றும் வரி | 42,901 | 75,610 | 77,501 | 32,459 | 39,191 | 55,863 | 52,960 | 34,351 |
| வாடகை | 3,531 | 794 | 764 | 209 | 4,084 | 1,143 | 1,138 | 179 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,472 | 3,046 | 3,046 | - | 2,703 | 1,689 | 1,689 | - |
| ஏனைய வருமானங்கள் | 181,974 | 263,867 | 263,867 | - | 346,038 | 396,203 | 396,203 | - |
| | 230,878 | 343,317 | 345,178 | 32,668 | 392,016 | 454,898 | 451,990 | 34,530 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் வீதவரி மற்றும் வரியாக முறையே ரூபா 39,191,000 மற்றும் ரூபா 42,901,000 வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டு முறையே ரூபா 55,863,000 மற்றும் ரூபா 75,610,000 வருமானமொன்று சிட்டையிடப்பட்டிருந்தமையால் வீதவரி மற்றும் வரிக்காக வருமான மதிப்பீடு தத்ரூபமாகக் காணப்படவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | தத்ரூபமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட கடன்கொடுத்தோரில் நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதி ரூபா 177,290,307 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 1,515,527 தொகை மூன்று வருடங்களை விட மிகையான மீதிகளாகக் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | செயற்திறனுடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2022 ஜனவரி 27 ஆந் திகதிய 2264/18 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் படி சபையினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டிய நிறுவனங்களை இனங்காண்பதற்காக 2023 ஆண்டு தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | குறிப்பிட்ட கணிப்பீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | தெமங்ஹந்திய மற்றும் ஆன்டிஅம்பலம ஆகிய 2 உப அலுவலகங்களினால் சுற்றுலா சபையின் ஹோட்டல்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தை பதிவு செய்வதற்காக குறிப்பிட்ட பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமையால் | - மேற்படி - | குறிப்பிட்ட பதிவேடுகள் பேணிச் செல்வதற்காக நடவடிக்ளை எடுக்க வேண்டும். |

கிடைக்கக் கூடிய வருமானத்தை சரியாக பெறுமதி மதிப்பீடு செய்து அறவீடு செய்தல் மேற்கொள்ளப்படுகின்றதா என தொடர்பாக மற்றும் குறிப்பிட்ட ஹோட்டல்களின் கணக்கு அறிக்கைகளின் பிரதியொன்று அல்லது குறிப்பிட்ட பற்றுச் சீட்டுக்களின் பிரதிகள் காணப்படாமையால் 2023 ஆண்டிற்கான கிடைத்திருந்த ரூபா 417,269 இற்கான வருமானம் தொடர்பாக திருப்தியடைய முடியாதுள்ளது.

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பூர்வாங்க எழுத்துமூல அங்கீகாரம் ஒன்று பெற்றுக் கொள்ளாமல் மே/கடான கெபெல்லகஸ் சந்தியில் கடையறைகளில் 3 கடையறைகள் துணை வாடகையாளர்களினால் அனுபவிக்கப்பட்டு வருகின்றது என கண்டறியப்பட்டதுடன் இறந்த வாடகையாளரின் பெயரில் துணை வாடகையாளரிடமிருந்து கடை வாடகை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என கண்டயறியப்பட்டது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என. | துணை வாடகைக்காக எழுத்துமூல அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | கோப்புக்கள் பேணிச் சென்றிருக்காத ரத்தொழுவ முதுவாடிய சந்தியில் அமைந்துள்ள 3 கடையறைகள் தொடர்பாக வாடகையாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒன்று காணப்படாததுடன் அவற்றில் 2 கடை அறைகள் தொடர்பாக பதிவு செய்யப்பட்டுள்ள வாடகையாளர்கள் மற்றும் தற்போது வியாபாரம் நடாத்துகின்ற நபர்கள் வித்தியாசமாகக் காணப்பட்ட போதிலும் துணை வாடகைக்கு வழங்குவது தொடர்பாக சபையினால் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன் என. | குறிப்பிட்ட உடன்படிக்கைகள் மற்றும் கோப்புக்கள் பேணிச் செல்ல வேண்டும். |
| (இ) | உதம்மிட பல்கரும கட்டிடத்தின் மேல்மாடியில் மற்றும் தரை மாடியில் காணப்படும் 07 கடையறைகளை வாடகைக்கு கொடுப்பதற்காக பதிவேடொன்று மற்றும் தனிப்பட்ட | மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குறிப்பிட்ட பதிவேடுகள் மற்றும் கோப்புக்கள் பேணிச் சென்று நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| கோப்புக்கள் சபையினால் பேணிச் சென்றிருக்காததுடன் அவற்றில் 6 கடையறைகள் தொடர்பாக 2023 திசெம்பர் 31 திகதியளவில் ரூபா 215,100 தொகை நிலுவை வாடகைத் தொகையினை அறவீடு செய்வதற்கு சபையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | எடுக்க வேண்டும். |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் படி வேலைகளுக்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த திட்டம் 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 வழிகாட்டலின் படி தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைத் திட்டமொன்றும் காணப்படவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன் என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி செயற்பட வேண்டும். |

**3.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண அபிவிருத்தி மானியத்தின் கீழ் ஏற்பாடுகள் கிடைக்கப் பெற்று சமூக அடிப்படை அமைப்புக்களின் கீழ் நிறைவேற்றுவதற்கு விதிக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 5,500,000 தொகைக்கான 4 செயற்திட்டங்கள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரினால் கூறுவிலைகள் அழைக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றது என. | ஏற்றுக் கொள்கின்றேன் என. | நிதி வழங்கும் நிறுவனத்தின் அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை சேவையை விட்டுச் சென்றிருந்த 6 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 699,440 இற்கான தொகை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவிலும் அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைத் தொகை அறவிடப்பட வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வுக் குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஜனவரி 28 திகதிய இலக்கம் DMA/2009(1)(I) கொண்ட முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வுச் சுற்றறிக்கைக்கு இணங்க மீளாய்வாண்டிற்காக சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் 02 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என. | சுற்றறிக்கை அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |